DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

Calender --- STC. 1418/2022
Miscellaneous ---
Preliminary Register ---

Sessions --- PW 2

Deposition of witness for

Name : செல்லத்துரைச்சி
Father's Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

27.11.2024

முதல் விசாரணை:

நான் மேலநீலிதநல்லூர் கிராமத்தில கிராம நிர்வாக அலுவலக உதவியாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 2021, 2022 ம்ஆண்டில் மேலநீலிதநல்லூர் கிராமத்தில் நான் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது 04.05.2022 ம்தேதி காலை 11.30 மணியளவில் நான் பணியில் இருந்த போது பசும்பொன்முத்துராமலிங்கத்தேவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்லூரிக்கு வெளியே சாலை மறியில் நடப்பதாக பொதுமக்களும், சத்திரம் காவல் நிலைய காவலர்களும் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நானும், கிராம நிர்வாக அலுவலரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்த போது சாலை மறியில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மாணவர்களும், பொதுமக்களும், சாலை மறியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜரான இந்த வழக்கின் எதிரிகள் சாலை மறியலில் ஈடுபட்டார்களா என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. பின்பு காவல் நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. பின்பு அன்று இரவு 8.00 மணியளவில் நானும், எனது கிராமநிர்வாக அலுவலரும், சாலை மறியல் தொடர்பாக புகார் அளித்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கிராம நிர்வாக அலுவலர் புகார் மனு அளிக்கும் போது நான் உதவியாக இருந்தேன் என்றால் சரியல்ல.

**(A1 to A4 present. )**